




# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



புதன், நவம்பர் 17.2021 மலர்:11 இதழ்:17


# சாலைகளைச் சீரமைக்க ரூ.300 கோடி-முதல்வர் ஸ்டாலின்

# நவம்பர் 18 ஆம் தேதி சென்னைக்கு ரெட் அலர்ட்

## மழையால் டெல்டா மாவட்டங்களில் 68,652 ஹெக்டேர் விளைநிலங்கள் பாதிப்பு-அமைச்சர்கள் குழு அறிக்கை தாக்கல்





வடகிழக்குப் பருவமழையால் டெல்டா மாவட்டங்களில் டெல்டா மாவட்டங்களில் 68,652 ஹெக்டேர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்த விவரங்களை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் ஆய்வுக் குழுவினர் அறிக்கையாகத் தாக்கல் செய்துள்ளனர்.வடகிழக்குப் பருவமழை காரணமாகத் தமிழகம் முழுவதும் தொடர்ந்து கனமழை பெய்தது. இதனால் தஞ்சாவூர், திருவாரூர், நாகை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்தன. மழையால் சேதமடைந்த பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் மற்றும் பல்வேறு கட்சியினர் தரப்பில் தமிழக அரசுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது.இந்த நிலையில், டெல்டா மாவட்டங்களில் மழையால் ஏற்பட்ட பயிர்ச் சேத விவரங்களை நேரில் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய, அமைச்சர் ஐ.பெரியசாமி தலைமையில் ஆய்வுக் குழுவை அமைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இக்குழுவில், தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெரியகருப்பன், ரகுபதி, மெய்யநாதன் உள்ளிட்ட அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர்.குழுவில் இடம் பெற்றுள்ள அமைச்சர்கள் அனைவரும் தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இதேபோல் முதல்வர் மு.க.ஸ்டாலினும் கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.சென்னை வந்த ஆய்வுக் குழுவினர் தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து பாதிப்பு நிலவரங்களை அறிக்கையாகத் தாக்கல் செய்துள்ளனர். அதில் வடகிழக்குப் பருவமழையால் தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை டெல்டா மாவட்டங்களில் 68,652 ஹெக்டேர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள விவரங்களைச் சரிபார்த்தபின் முதல்வர் மு. க. ஸ்டாலின் தரப்பில் இருந்து மழையால் பாதித்த விளைநிலங்களுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தி பிரதமர் மோடிக்கு விரைவில் கடிதம் அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடகிழக்குப் பருவ மழையினால் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும், கன்னியாகுமரியிலும் மிக அதிகளவில் சாலைகள் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்பட்டன. தமிழக முதல்வர் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று தொடர்ந்து ஆய்வு செய்து நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இப்பகுதிகளில் சாலைகள், வடிகால்கள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைப்பதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், டெல்டா மாவட்டங்களில் கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள பயிர் சேதங்கள் குறித்து ஆய்வு செய்து, விவசாயிகளை சந்தித்து, அவர்களது கருத்துகளைக் கேட்டு, அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியசாமி தலைமையில் ஆறு அமைச்சர்கள் அடங்கிய குழுவினை அமைத்துத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 11.11.2021 அன்று ஆணையிட்டிருந்தார்.இதன்படி இக்குழு, உடனடியாக 12.11.2021 அன்று தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டு நீரில் மூழ்கிய பயிர்களைப் பார்வையிட்டு, பயிர் பாதிப்பு நிலவரம் குறித்து கள ஆய்வு மேற்கொண்டு, பின்னர் விவசாயிகளைச் சந்தித்து அவர்களின் கருத்துகளைக் கேட்டறிந்தனர்.மேலும், தமிழக முதல்வர் 13.11.2021 அன்று டெல்டா மாவட்டங்களில் கள ஆய்வு மேற்கொண்டு பயிர் சேதங்கள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார். 16.11.2021 கன்னியாகுமரி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்வர் பார்வையிட்டார். இந்நிலையில் 16.11.2021 பயிர் சேதங்கள் குறித்த அறிக்கையினை அமைச்சர்கள் முதல்வரிடம் சமர்ப்பித்தனர். இக்குழுவின் அறிக்கை மீதான ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர்கள் மற்றும் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். விரிவான ஆலோசனைக்குப் பின்னர், தமிழக முதல்வர் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார். அறுவடைக்குத் தயாராக இருந்த குறுவை— கார்— சொர்ணவாரிப் பயிர்கள், முழுமையாக சேதமடைந்த இனங்களில் விவசாயிகளுக்கு இழப்பீடாக, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 20 ஆயிரம் வழங்கப்படும் என்றும்,நடப்பு சம்பா பருவத்தில் நடவு செய்து, நீரில் மூழ்கி சேதமடைந்த பயிர்களை மறு சாகுபடி செய்திட ஏதுவாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 6 ஆயிரத்து 38 ரூபாய் மதிப்பீட்டில் இடுபொருள்களைப் பின்வருமாறு வழங்கத் தமிழக முதல்வர் உத்தரவிட்டார்.மழை வெள்ளத்தால் மாநிலம் முழுவதும் பாதிப்படைந்த சாலைகள், வடிகால்கள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளைச் சரி செய்ய ரூ.300 கோடி வழங்கவும் முதல்வர் உத்தரவிட்டார்.இந்தக் கூட்டத்தில், குழுவின் தலைவர் கூட்டுறவுத் துறை அமைச்சர் இ.பெரியசாமி, குழுவின் உறுப்பினர்கள் தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் , காலநிலை மாற்றம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, கூடுதல் தலைமைச் செயலாளர் வருவாய் நிர்வாக ஆணையர் பணீந்திர ரெட்டி , நிதித்துறை முதன்மைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் குமார் ஜயந்த், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை செயலாளர் சி. சமயமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர் ஆ. அண்ணாதுரை, பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் என். சுப்பையன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வன்னியர்களுக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு ரத்து





வன்னியர்களுக்கு 10.5 சதவீத உள்இடஒதுக்கீடு வழங்கி இயற்றப்பட்ட சட்டத்தை ரத்து செய்து உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு செய்துள்ளது.கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு என உள்ள 20 சதவீத இடஒதுக்கீட்டில், வன்னியர் சமுதாயத்தினருக்கு 10.5 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்கி, கடந்த பிப்ரவரியில் தமிழக அரசு சட்டம் இயற்றியது. இந்த சட்டத்தை ரத்து செய்ய கோரி தொடரப்பட்ட மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்ற மதுரை கிளை, உள்இடஒதுக்கீடு சட்டம் அரசியலமைப்புக்கு எதிரானது, செல்லாது என கூறி சட்டத்தை ரத்து செய்து நவ1.ல் தீர்ப்பளித்தது.இந்த தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசின் தலைமைச் செயலாளர் சார்பில் வழக்கறிஞர் டி.குமணன், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு மனுவில் கூறியிருப்பதாவது,10.5 சதவீத உள்இடஒதுக்கீட்டால், தமிழகத்தில் நடைமுறையில் உள்ள 69 சதவீத இடஒதுக்கீடு எள்ளளவும் மீறப்படவில்லை. மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டில் உள்இடஒதுக்கீடு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. வன்னியர் சமூகத்தின் 7 உட்பிரிவுகளுக்கும் சேர்த்துதான் உள் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.இதேபோல பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் பிரிவினருக்கும், அருந்ததியினருக்கும் தனி உள் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக சட்டம் இயற்ற அரசியலமைப்பு சட்டப்படி மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் கடந்த 1983 ல் நடத்திய கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் உள்ள மொத்த மக்கள்தொகை அடிப்படையிலேயே இடஒதுக்கீடு இந்த உள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்த மேல்முறையீட்டு மனுவை விரைவாக விசாரணைக்கு எடுத்து எதிர் மனுதாரர்களின் கருத்துகளை கோராமல், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்த தீர்ப்புக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.இதேபோல், உள்இடஒதுக்கீடு சட்டம் ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து பாமக நிறுவனர் ராமதாஸ், தலைவர் ஜி.கே.மணி ஆகியோரும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ளனர்.




# ஜெய் பீம் படக்குழுவிடம் ரூ.5 கோடி இழப்பீடு கேட்டு வன்னியர் சங்கம் சார்பில் வழக்கறிஞர் நோட்டீஸ்



இயக்குநர் த.செ.ஞானவேல் இயக்கத்தில், நடிகர் சூர்யா நடிப்பில் உருவான ஜெய் பீம் திரைப்படம் கடந்த 2 ஆம் தேதி அமேசான் ப்ரைமில் வெளியானது. 90 களில் நடந்த உண்மை சம்பவத்தை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட இப்படம், ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. ஜெய் பீம் படத்தில் பழங்குடி மக்களை சித்திரவதைப்படுத்தும் காவல்துறை அதிகாரி குருமூர்த்தி வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர் போல் காட்சி அமைக்கப்பட்டுள்ளதாகவும், படத்தின் ஒரு காட்சியில் அவரது வீட்டில் வன்னியர் சங்கத்தின் காலண்டர் இடம்பெற்றிருப்பதாகவும் கூறி அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் கண்டணங்களை எழுப்பினர். அதன் பின் ஜெய் பீம் படத்தின் காட்சியில் மாற்றம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பாமக இளைஞரணித் தலைவரும் , மாநிலங்களவை உறுப்பினருமான அன்புமணி ராமதாஸ், ஜெய் பீம் படம் குறித்து நடிகர் சூர்யாவுக்கு 9 கேள்விகள் கொண்ட கடிதம் எழுதினார். இதற்கு சூர்யாவும் அறிக்கை வாயிலாக பதிலளித்தார். இந்நிலையில், ஜெய் பீம் படம் தொடர்பாக நடிகர் சூர்யா, தயாரிப்பாளர் ஜோதிகா, இயக்குநர் த.செ.ஞானவேல் உள்ளிட்டோருக்கு வன்னியர் சங்கத்தின் சார்பாக வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அதில், வன்னியர் சமூகத்தை தவறாக சித்தரித்ததற்காக நாளிதழ் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் 24 மணி நேரத்திற்குள் மன்னிப்பு கேட்க வேண்டும், இல்லையென்றால், இந்த விவகாரத்தை சட்டப்படி எதிர்கொள்வோம் என கூறப்பட்டுள்ளது. மேலும் ரூ.5 கோடி இழப்பீடு தர வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நடிகர் சூர்யா வீட்டிற்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு



இயக்குனர் ஞானவேல் இயக்கத்தில் நடிகர் சூர்யாஇ மணிகண்டன், லிஜோமோல் ஜோஸ், ரெஜிஷா விஜயன், பிரகாஷ்ராஜ் உள்ளிட்ட பலர் நடித்து அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியான திரைப்படம் ஜெய்பீம் படத்தின் கரு பலராலும் பேசப்பட்ட அதே சமயம், படத்தில் இடம் பெற்றுள்ள சில காட்சிகளும் சர்ச்சையாயின. இதையடுத்து நடிகர் சூர்யாவுக்கு எதிராக சமூக வலைதளங்களில் கண்டங்கள் தெரிவிக்கப்பட்டது. ஜெய்பீம் திரைப்படத்தில் குற்றவாளி கதாபாத்திரத்துக்கு வைத்திருந்த பெயர் மற்றும் குற்றவாளி கதாபாத்திரத்தின் பின்பக்கம் வன்னியர்களின் அடையாளம் இடம்பெற்றது போன்றவை தொடர்பாக விமர்சனங்கள் எழுந்தது. இதை தொடர்ந்து அந்த காட்சி நீக்கப்பட்டது. எனினும், இந்த விவகாரம் தொடர்பாக நடிகர் சூர்யாவுக்கு எதிர்ப்புகள் எழுந்த வண்ணம் உள்ளது. இந்த நிலையில், சென்னை தியாகராயநகர் ஆற்காடு தெருவில் உள்ள சூர்யாவின் வீட்டிற்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. சமூக வலைத்தளங்களில் சூர்யாவுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் சில தரப்பினர் கருத்து தெரிவித்து வந்த நிலையில், துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# ஜெ. சொத்துக்குவிப்பு வழக்கை விசாரித்த நல்லம் மநாயுடு மறைவு:முதலமைச்சர் நேரில் அஞ்சலி



முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் விசாரணை காவல் அதிகாரியாகவும்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் கண்காணிப்பாளராக இருந்த நல்லம்மநாயுடு வயது 83) வயது முதிர்வு காரணமாக காலமானார். இந்த நிலையில், சென்னை பெரவள்ளூரில் உள்ள அவரது வீட்டிற்கு இன்று 16.11.2021 நேரில் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நல்லம்மநாயுடுவின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்திஇ குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்த நிகழ்வின் போது, தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ. வ. வேலுஇ இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமிஇ தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

# மாணவர்கள் தயாராக செமஸ்டர் தேர்வு தள்ளிவைப்பு அண்ணா பல்கலைக்கழகம் தகவல்




தமிழகத்தில் அனைத்து கல்லூரிகளும் செமஸ்டர் உள்பட அனைத்து தேர்வுகளையும் வகுப்பறைகளில் நேரடியாக மட்டுமே நடத்த வேண்டும் என்று உயர்கல்வித்துறை நேற்று உத்தரவிட்டது. இந்த நிலையில் அண்ணா பல்கலைக்கழகம் எஞ்ஜினீயரிங் மாணவர்களுக்கு செமஸ்டர் மற்றும் செய்முறை தேர்வு நடத்த திட்டமிட்டு இருந்த நிலையில், மாணவர்கள் ஆப்லைன் தேர்வுக்கு தயாராக கூடுதல் அவகாசம் கேட்டு கோரிக்கை வைத்ததாக கூறப்படுகிறது. மாணவர்களின் அந்த கோரிக்கையை ஏற்று, அண்ணா பல்கலைக்கழகம் செமஸ்டர் தேர்வை வாரங்களுக்கு தள்ளி வைத்து இருக்கிறது. இதுகுறித்து அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.வேல்ராஜிடம் கேட்டபோது, டிசம்பர் 13 ந் தேதி முதல் தொடங்கி நடைபெற இருந்த செமஸ்டர் தேர்வு 2 வாரங்கள் தள்ளிவைக்கப்பட்டு, டிசம்பர் 27 ந் தேதி முதல் தொடங்கி நடைபெற இருக்கின்றன, என்றார்.

விளம்பர தொடர்புக்கு
9597887847

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

GOLAAH TRAVELS
GoLAAH
TRAVELS
முன்பதிவிற்கு
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?.
இப்போது 50-க்கும் மேற்பட்ட
கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும்
கார் வாடகைக்கு
மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்
Aagaramuthalaa | தொடர்புக்கு 9597887847 / 8870884969

அகர முதல
மின்னிதழ்
Aagaramuthalaa
www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறையில் மழை பாதிப்பை ஆய்வு செய்த முதல்வர் மு.க.ஸ்டாலின்

## மாயூரநாதர் சுவாமி கோயிலில் துலா உற்சவம்...தேரோட்டத்தில் பங்கேற்ற பக்தர்கள்



தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில், மழை பெய்தது, குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் பரவலாகப் பெய்த கனமழையின் காரணமாக பயிர்கள் மழை நீரில் மூழ்கி பெரும் பாதிப்பை அடைந்துள்ளது. இந்நிலையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் மழை இல்லாத சூழலில், மழை பாதிப்புகள் குறித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டுள்ளார். முன்னதாக கடலூர் மாவட்டத்தில் ஆய்வை தொடங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதனை தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டார். மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகா புத்தூரில் தண்ணீர் சூழ்ந்த சம்பா, தாளடி பயிர்கள் பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து தரங்கம்பாடி தாலுக்கா கேசவன்பாளையம் சுனாமி குடியிருப்பு பகுதியில் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

மேலும் தண்ணீர் சூழ்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். பின்னர் அங்குள்ள மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 124 குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி மற்றும் 15 வகையான மளிகை பொருட்கள், பாய், உடைகள் உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கினார். இப்பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் தங்கள் வீடுகள் மிகவும் பழுதடைந்து விட்டதாகவும் 38 வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று முதல்வரிடம் கோரிக்கை மனு அளித்தனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் 67 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா மற்றும் தாளடி பயிர்கள் நடவு செய்யப்பட்டுள்ளது. அதில் 7 ஆயிரம் ஹெக்டேரில் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளதாகவும், மாவட்டத்தில் 98 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும், 7 வீடுகள் முழுமையாகவும், 246 வீடுகள் பகுதியாகவும் கனமழை காரணமாக சேதமடைந்துள்ளது என்று முதல்வரிடம் மாவட்ட ஆட்சியர் லலிதா தெரிவித்தார். தொடர்ந்து வடிகால் வாய்க்கால்களை தூர்வாரததால் வெள்ள நீர் வடிய வழியின்றி 10 நாட்களுக்கு மேலாக பல்வேறு பகுதிகளில் பயிர்களை அழுகி விட்டதாக விவசாயிகள் முதல்வரிடம் தெரிவித்தனர். இந்த ஆய்வில் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி கே.என்.நேரு, மெய்யநாதன் மற்றும் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா. முருகன் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார் பாதிக்கப்பட்ட விவரங்களை முதல்வரிடம் தெரிவித்தனர். பாதிப்புகள் குறித்து அனைத்து தரப்பினரிடையும் கேட்டறிந்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் அனைத்து நடவடிக்கை எடுப்பதாக பொதுமக்களிடம் தெரிவித்தார்.



### மயிலாடுதுறை மாவட்டத்தில் பெய்த கனமழையில் சேதமான

## பயிர்கள் குறித்து அமைச்சர்கள் குழு ஆய்வு



தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கனமழை பெய்தது குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் பரவலாக பெய்த கனமழையின் காரணமாக பயிர்கள் மழை நீரில் மூழ்கியுள்ளன. இதுகுறித்து ஆய்வு செய்து, தற்போது பயிர்களைக் காப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவும், பயிர் சேத விவரங்களை அறியவும், அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்றினை கூட்டுறவுத் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி தலைமையில் அமைத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதனை தொடர்ந்து அமைச்சர்கள் குழு முன்னதாக தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட மாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டனர். அதனை தொடர்ந்து இரவு மயிலாடுதுறை மாவட்டம் வருகை புரிந்த அமைச்சர்கள் குழு மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா எருக்கட்டாஞ்சேரி பகுதியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி தலைமையில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பெரிய கருப்பன், ரகுபதி, மெய்யநாதன் அடங்கிய இருளில் சாலையில் நின்றவாறு நீரில் மூழ்கிய சம்பா பயிர்களை நேற்று இரவு பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர் . பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி கூறுகையில், கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் அதிமுக அரசு முறையாக தூர்வாரும் பணியை மேற்கொள்ளாததால் தற்போது மழை வெள்ள பாதிப்பிற்கு தமிழக மக்கள் உள்ளாகியுள்ளனர். ஆறுகள், குளங்கள் தூர் வாராமல் கடந்த அதிமுக அரசு விளம்பரத்தை மட்டும் தேடி கொண்டனர். சுமார் 7 ஆயிரம் ஹெக்டேர் மயிலாடுதுறை மாவட்டத்தில் சம்பா, தாளடி பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உரம் பூச்சி மருந்து உள்ளிட்ட இடு பொருள்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மழையால் பாதித்த பயிர்கள் குறித்து உரிய முறையில் வேளாண் துறை மூலம் கணக்கீடு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் . பயிர் காப்பீடு செய்வதற்கான காலக்கெடுவை நீட்டிக்க மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து உள்ளோம் என்றார் . மேலும் இந்த ஆய்வு குறித்து இப்பகுதி விவசாயிகள் கூறுகையில் விவசாய பாதிப்புகளை ஆய்வு செய்த வந்த அமைச்சர்கள் இரவு வேளையில் இருளில் வந்து பாதிப்பை நெடுஞ்சாலையில் நின்று கொண்டு எவ்வாறு கண்டறிய முடியும், விவசாயிகளின் வேதனையை புரிந்து கொள்ளாமல் பெயரளவில் மட்டுமே இந்த ஆய்வு நடைபெற்றுள்ளதாக வேதனை தெரிவித்தனர். இதில் வேளாண் உற்பத்தி ஆணையர் சமயமூர்த்தி, வேளாண் துறை இயக்குனர் அண்ணாதுரை, மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் லலிதா மற்றும் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா . முருகன் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## மயிலாடுதுறை மயூரநாதர் கோவில் துலா உற்சவம் கோலாகலம்









மயிலாடுமுறை: ஐப்பசி மாத துலா உற்சவத்தை முன்னிட்டு மயிலாடுதுறை மாயூரநாதர் சுவாமி கோயிலில் திருத்தேரோட்டம்நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

### மயிலாடுதுறை:சாலையை சரிசெய்ய

# கர்ப்பிணி மனைவியுடன் பிச்சையெடுத்த இளைஞர்





மயிலாடுதுறையில் ஓராண்டுக்கும் மேலாக சேதமடைந்து காணப்படும் சாலையை சரி செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்காததால் சாலையை சீர் செய்ய இளைஞர் ஒருவர் தனது கர்ப்பிணி மனைவியுடன் பிச்சை எடுக்கும் போராட்டத்தில் ஈடுபட்டார். மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் புதுத்தெருவில் உள்ளது . இந்த சாலையின் ஒருபகுதி கடந்த ஓராண்டும் மேலாக சேதமடைந்துள்ளது. இதுகுறித்து, இப்பகுதி மக்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் துறை அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்துள்ளனர். எனினும், மாவட்ட நிர்வாகம் சார்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதையடுத்து, அதே தெருவில் வசிக்கும் சங்கர் என்ற இளைஞர் நிறைமாத கர்ப்பிணியான தனது மனைவியுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு பிச்சை எடுக்கும் போராட்டத்தில் ஈடுபட்டு, பொதுமக்களிடம் பிச்சை எடுத்து நிதி திரட்டினார். அப்போது, அவ்வழியாக சென்ற திமுக மாவட்ட செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதாமுருகன் போராட்டத்தை கைவிடுமாறும், விரைவில் அந்த சாலையை சீரமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். இதையடுத்து, போராட்டத்தை விலக்கிக் கொண்ட தம்பதியினர் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு சென்று, அங்கு நடைபெற்றுவந்த மக்கள் குறைதீர்க் கூட்டத்தில் பங்கேற்ற மாவட்ட வருவாய் அலுவலர் முருகதாஸிடம் சென்று, அந்த நிதியை வைத்துக்கொண்டு, சேதமடைந்த சாலையை செப்பனிட வலியுறுத்தினார். பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் பள்ளத்தில் மூன்றுமுறை தடுக்கி விழும் நிலை ஏற்பட்டதாகவும் சங்கர் கூறினார். பணத்தை பெற்றுக்கொள்ள மறுத்த மாவட்ட வருவாய் அலுவலர் சம்பந்தப்பட்ட துறையினரை அழைத்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்

# மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு



மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம், ஆறுபாதி ஊராட்சி, ஈஸ்வரன் கோயில் தெருவில் தமிழ்நாடு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம். முருகன் மழையால் பாதிக்கப்பட்ட வீடு மற்றும் விளைநிலங்களை பார்வையிட்டார். மேலும், பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிய அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது, நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களைத் தவிர வேறு முகாம்கள் அமைக்கப்படவில்லை உடனே போர்க்கால அடிப்படையில் பணிகளை முடுக்கி விடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பழமை வாய்ந்த கூரை வீடுகள் மற்றும் தொகுப்பு வீடுகளை கணக்கெடுத்து சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினருக்கும் வழங்க வேண்டும் என்று தெரிவித்தார். பாதிக்கப்பட்ட பகுதியை பார்த்த அமைச்சர் உடனே ஜேசிபி இயந்திரம் மற்றும் மழைநீரை அகற்றுவதற்கு இயந்திரங்களையும் வரவழைக்கப்பட்டு மழைநீர் தேங்கி இருக்கும் பகுதிகளில் நீரை அகற்றும் பணிகளை ஏற்பாடு செய்தவர் மேலும் தண்ணீர் சூழ்ந்த இடங்களில் தண்ணீரை வெளியேற்றுவதற்கு அரசு சார்பில் போர்க்கால நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். நிகழ்வின்போது நாகை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ஞானவேலன், செம்பை ஒன்றிய செயலாளர்கள் அப்துல்மாலிக், அன்பழகன், ஒன்றிய குழு உறுப்பினர் நந்தினி ஸ்ரீதர், ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் மஞ்சுளா, தரங்கம்பாடி வட்டாட்சியர் ஹரிதரன் தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி அமைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் அரசு அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.

### மயிலாடுதுறை: நெல் கொள்முதல் நிலையத்தில்

# 1000 நெல் மூட்டைகள் மழையில் நனைந்து நாசம்!





தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை கடந்த மாதம் அக்டோபர் 28 ஆம் தேதி தொடங்கியது. அன்று முதல் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் தொடர் மழை பெய்தது. அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழ்நாட்டின் சென்னை திருவள்ளூர் காஞ்சிபுரம் புதுச்சேரி கடலூர் மயிலாடுதுறை திருவாரூர் நாகப்பட்டினம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கடந்த 3 நாட்களுக்கும் மேலாக இரவு பகல் பாராது கன மழை பெய்தது. இந்நிலையில் காவிரி கடைமடை மாவட்டமான மயிலாடுதுறை மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் விவசாயம்நேரடி மீன்பிடி தொழில் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறையில் பயிரிடப்பட்டுள்ள என்பது ஆயிரம் ஏக்கர் சம்பா சாகுபடி மழை நீரில் மூழ்கி அழுகி வீணாகும் சூழலுக்கு தள்ளப்பட்டு உள்ளது. அதேபோன்று மாவட்டத்தில் உள்ள மீனவ கிராமங்களில் கடல் சீற்றம் காரணமாக கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி மீனவர்கள் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக கடலுக்கு மீன்பிடிக்க செல்லாமல் தங்கள் வாழ்வாதாரம் இழந்து தவித்து வருகின்றனர்.இந்த சூழலில் மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா பெரம்பூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் நெல் கொள்முதல் நிலையம் அமைந்துள்ளது. இங்கு, குறுவைப்பருவத்துக்கான நெல் கொள்முதல் தொடங்கி கடந்த அக்டோபர் 6 ஆம் தேதி முழுவதுமாக கொள்முதல் நிறுத்தப்பட்டது. ஆனால், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல், கிடங்குக்கு அனுப்பப்படாமல் 5000 ணுமூட்டைகளுக்குமேல் கொள்முதல் நிலையத்திலேயே அடுக்கி வைத்துள்ளனர். இந்த கொள்முதல் நிலையத்தில் மேற்கூறை வசதி உள்ளபோதிலும், கூடுதலாக உள்ள 3000 மூட்டை நெல் திறந்த வெளியில் அடுக்கப்பட்டுள்ளது. இவற்றைப் பாதுகாக்க அரசு போதுமான அளவில் தார்ப்பாயை வழங்காததால், ஏற்கெனவே இருக்கின்ற தார்ப்பாய்களை வைத்து முடிந்தவரை நெல்மூட்டைகளை கொள்முதல் நிலைய ஊழியர்கள் பாதுகாத்து வருகின்றனர். இருப்பினும் 1000 மூட்டைகளுக்கு மேல் மழையில் நனைத்து முளைத்து வீணாகியுள்ளது. இதனால் அந்த நெல்மூட்டைகள் பசும்புல் போர்த்தியது போல பச்சை நிறத்தில் காட்சியளிக்கிறது. மழையில் நனைந்து மீதம் உள்ள நெல் மூட்டைகளும் வீணாவதற்கு முன்பாக அவற்றை லாரிகள் மூலம் கிடங்குக்கு கொண்டு சென்று, அரசுக்கு நஷ்டம் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும் என்று நுகர்பொருள் வாணிபக்கழகத்துக்கு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### மயிலாடுதுறையில் கொட்டும் மழையில் 90 வயது

# தாயை வீட்டை விட்டு வெளியேற்றிய மகன்கள்



மயிலாடுதுறை அடுத்த வாணாதிராஜபுரத்தை சேர்ந்த 90 வயதான தாவூத்பீவிக்கு இரண்டு மகன் ஒரு மகள் உள்ள நிலையில், இவர் தனது கணவனை இழந்த பின்னர் தனது வீட்டில் இளைய மகன் அசரப்அலியுடன் வசித்து வந்துள்ளார் . இந்நிலையில் மகன் அசரப்அலி வெளிநாடு சென்றதும் மருமகள் மாமியார் தாவூத்பீவியை கடந்த மாதம் வீட்டைவிட்டு வெளியை விரட்டி உள்ளனர். அதனை தொடர்ந்து அதே ஊரில் வசித்துவரும் தனது பெரிய மகனிடம் தாவூத்பீவி சென்றுள்ளார். அவரும் பெற்ற தாய் மீது சிறிதும் இரக்கம் இன்றி விரட்டி அனுப்பியுள்ளார். மகள் வீட்டிற்கு சென்றவரை அவரும் ஏற்று கொள்ளாமல் வெளியை அனுப்பியுள்ளார். இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளான தாவூத்பீவி வானாதிராஜபுரம் ஊர் பஞ்சாயத்தாரிடம் இதுகுறித்து முறையிட்டுள்ளார். ஆனால் ஊர் பஞ்சாயத்தார் தாவூத்பீவியை தங்களுடன் வைத்து கவனித்து கொள்ள வலியுறுத்தியுள்ளனர். அதற்கும் அவரது மகன்கள் ஒத்துக்கொள்ளவில்லை. இந்த சூழலில் அக்கம்பக்கத்தினர் அளித்த உணவை உண்டு வந்த தாவூத்பீவி, மயிலாடுதுறையில் கடந்த மாதம் 4 ஆம் தேதி மாவட்ட ஆட்சியரின் மனுநீதி நாள் முகாமில் கலந்துகொண்டு என் கடைசி காலத்தில் என்னை என் பிள்ளைகள் எனது கணவர் உழைப்பில் உருவான வீட்டை பிடுங்கி அதில் வசித்து வருவதாகவும், ஒருவேளை உணவு கூட கொடுக்க மன இன்றி என்னை வீட்டை விட்டு துரத்தி வீட்டினர் என்றும், எனக்கு உரிய சொத்தை தன் பெற்ற பிள்ளைகளிடம் இருந்து மீட்டு தரும் பட்சத்தில் அதனை விற்று அந்த பணத்தை வங்கியில் செலுத்தி அதில் வரும் வட்டியில் தனது இறுதி காலத்தை கழித்துக் கொண்டு , நிம்மதியாக வாழ்வேன் எனவும் , இல்லை என்றால் என்னை கருணை கொலை செய்துவிடுங்கள் என்று மாவட்ட ஆட்சியர் லலிதாவிடம் மனு அளித்தார். மனுவை பெற்று கொண்ட மாவட்ட ஆட்சியர் லலிதா வருவாய் கோட்டாட்சியர் பாலாஜியிடம் தாவூத்பீவியின் குடும்பத்தினரிடம் விசாரணை நடத்தி உரிய தீர்வு பெற்றுத்தர உத்தரவிட்டார். இதனை அடுத்து மயிலாடுதுறை கோட்டாட்சியர் பாலாஜி , மூதாட்டியின் மகன்களை விசாரணைக்கு வர உத்தரவிட்டு அதுவரை இளைய மகன் வீட்டில் தாய் தாவூத்பீவி பாதுகாப்பாக இருப்பதற்கு பேசி நடவடிக்கை எடுத்திருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் மழை நேரத்தில் வீட்டைவிட்டு வெளியேற்றி வாசல்கதவை இளைய மகன் அசரப்அலியின் மனைவி பூட்டியுள்ளார். இதனால் செய்வதறியாது தவித்த 9 0 வயதான தாய் கொட்டும் மழையில் நனைந்தபடியே எதிர்வீட்டில் கையேந்தி உண்டு வருகிறார். மேலும் தான் உயிர்வாழ நடவடிக்கை அரசு உதவு வேண்டும் இல்லை எனில் தன்னை கருணை கொலை செய்து விடுங்கள் என கண்ணீர் மல்க கோரிக்கை வைத்துள்ளார்.

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

GoLAAH TRAVELS
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?. இப்போது 50+க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்
9597887847 / 8870884969

அகர முதல
மின்னிதழ்
Aagaramuthalaa
www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# கடலூர் மாவட்ட செய்திகள்

## வெள்ளத்தில் மூழ்கிய கடலூரை ஆய்வு செய்த முதலமைச்சர்

### கடலூர் மாவட்டத்தில் உள்ள 228 ஏரிகளில் 161 ஏரிகள் முழுமையாக நிரம்பின





தென்மேற்கு பருவமழை காலத்தில் கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதனால் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் அனைத்தும் நிரம்பாவிட்டாலும், நீர்நிலைகளில் ஓரளவு தண்ணீர் இருந்தது. இந்த நிலையில் தமிழகத்தில் கடந்த மாதம் 25 ஆம் தேதி தொடங்கிய வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளது. இதனால் கடலூர் மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக தொடர் கனமழை பெய்தது. மேலும் தற்பொழுது கடந்த இரண்டு நாட்களாக மழை இன்றி காணப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த ஒரு வார காலமாக பெய்த தொடர் மழையால் பெரும்பாலன ஆறுகள், ஓடைகள் மற்றும் நீர்வரத்து வாய்க்கால்களில் மழைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதில் பல இடங்களில் விளை நிலங்களுக்குள்ளும் தண்ணீர் புகுந்துள்ளது. இந்த மழைநீர் இன்னும் வடியாததால், பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் கண்ணீர் வடித்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று முன் தினம் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு பாதிக்கபட்டவர்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கினார். மேலும் 32 ஏரிகளில் 76 முதல் 99 சதவீதமும், 18 நீர்நிலைகளில் 51 முதல் 75 சதவீதமும், 15 ஏரியில் 26 முதல் 50 சதவீதமும், 2 ஏரிகளில் 25 சதவீதத்திற்கு குறைவாகவும் தண்ணீர் உள்ளது. எப்பொழுதும் இல்லாத அளவிற்கு வடகிழக்கு பருவமழை தொடங்கிய சிறிது நாட்களிலேயே 161 ஏரிகள் நிரம்பி உள்ளதால், பருவமழை காலம் முடிவதற்குள் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளும் நிரம்ப வாய்ப்புள்ளது என பொதுப்பணித்துறை அதிகாரிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. மேலும் தொடர் மழையால்கடலூர் மாவட்டத்தின் முக்கிய ஆறுகள் ஆன, கொள்ளிடம் ஆற்றில்வினாடிக்கு 44 ஆயிரத்து 872 கனஅடி தண்ணீரும், வெள்ளாற்றில் வினாடிக்கு 7,556 கனஅடியும், மேல் பரவன ஆற்றில் வினாடிக்கு 1,096 கனஅடி தண்ணீரும், கீழ்பரவன ஆற்றில் வினாடிக்கு 2,435 கனஅடியும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. மேலும் கடலூர் நகரில் செல்லக்கூடிய தென்பெண்ணை ஆற்றில் வினாடிக்கு 7,523 கனஅடியும், கெடிலம் ஆற்றில் வினாடிக்கு 4,048 கனஅடி தண்ணீரும் கரைபுரண்டு ஓடுகிறது. மேலும் இந்த ஆறுகளில் இருந்து பிரிந்து செல்லக்கூடிய கிளை வாய்க்கால்களிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால், மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரி, குளங்கள், அணைகள் உள்ளிட்டவை வேகமாக நிரம்பி வருகின்றன. அதன்படி பொதுப்பணித்துறைக்கு சொந்தமாக மாவட்டத்தில் உள்ள 228 ஏரிகளில் இது வரை 161 ஏரிகள் நிரம்பி உள்ளன.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இந்நிலையில் கடலூர் மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்து கன மழை பெய்து வருகிறதுஇ இதனால் தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ஏரிகள், குளங்கள், மற்றும் இதர நீர் நிலைகள் அனைத்தும் தொடர்ந்து வேகமாக நிரம்பி வருகின்றன. இதன் காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உள்ளது குறிப்பாக சென்னை மற்றும் டெல்டா மாவட்டங்களில் கடமையான பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன. இந்நிலையில் மழையால் பாதிக்கபட்ட சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேரில் ஆய்வு மேற்கொண்டார். அதன் தொடர்ச்சியாக டெல்டா பகுதிகளான கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் கனமழையினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதன்படி முதற்கட்டமாக கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் க்கு கடலூர் பாண்டிச்சேரி எல்லையான ரெட்டிசாவடி பகுதியில் திமுகவினர் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் கடலூர் மாவட்டம் குறிஞ்சிபாடி அடுத்த அரங்கமங்களம் ஊராட்சிக்கு உட்பபட்ட ராஜாகுப்பம் எனும் பகுதியில் மழையால் பாதிக்கபட்ட பகுதிகளை பார்வையிட்டு மேலும் மழையால் பாதிக்கபட்ட இடங்கள் குறித்தும் அந்த பகுதிகளில் ஏற்பாடு செய்யபட்டு உள்ள நடவடிக்கைகள் குறித்தும் கடலூர் மாவட்ட ஆட்சியர் பாலசுப்பிரமணியத்திடம் கேட்டு அறிந்தார். பின்னர் ராஜாகுப்பம் பகுதி மக்களுக்கு உள்ள 18 குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி 10 கிலோ மளிகை பொருட்கள், வேட்டி சேலை, பாய், போர்வை போன்ற நிவாரண பொருட்களை வழங்கினார். பின்னர் 18 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கினார் மேலும் பகுதி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. பின்னர் சாலையில் நின்று கொண்டு இருந்த மக்களிடம் மனுக்களை பெற்று கொண்டார். அதனை தொடர்ந்து அடூர் அகரம் கிராம பகுதிகளில் கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 550 ஹெக்டர் விவசாய நிலம் நீரில் மூழ்கி உள்ளது. இதில் நெற்பயிர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டு உள்ளதால் பாதிக்கபட்ட பகுதிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் மழையின் காரணமாக இடிந்து விழுந்த 5 வீட்டின் உரிமையாளர்களுக்கு மற்றும் மேலும் மழையால் ஏற்பட்ட கால்நடை உயிரிழப்புகளுக்கும் நிவாரணம் வழங்குகினார். கடலூர் மாவட்டத்தில் ஆய்வின் பொழுது நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, அமைச்சர்கள் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், கணேசன், கே.என்.நேரு ஆகியோர் உடன் இருந்தனர்.

அகர முதல
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

## கடலூரில் 1 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு

# பள்ளிகள் திறப்பு – மேள தாளம் முழங்க வரவேற்பு





தமிழகத்தில் 17 மாதங்களுக்குப் பிறகு 1 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்கள் கடந்த 1 ஆம் தேதி திறக்கப்பட்டது. இதையொட்டி, தொடக்கக் கல்வி இயக்குநரகம் பள்ளிகளுக்கு பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டிருந்தது. மேலும், 50 விழுக்காடு மாணவர்களுடன் பள்ளிகள் நடைபெறும் என்றும்இ சுழற்சி முறையில் ஒருநாள் விட்டு ஒருநாள் மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. அதனால் முதல் நாள் வரக்கூடிய மாணவர்கள் அடுத்த நாள் பள்ளிக்கு வரத் தேவையில்லை. முழுநாளும் வகுப்பு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் கடலூர் மாவட்டத்தில் கன மழையால் தொடங்கப்படாமல் இருந்த 1 ஆம் வகுப்பில் இருந்து 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளி திறக்கப்பட்டது மாணவ மாணவிகள் உற்சாகத்துடன் பள்ளிகளுக்கு வந்தனர். தமிழகத்தில் கடந்த ஒன்றாம் தேதி 1 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்புக்கான மாணவர்களுக்கான பள்ளிகள் திறக்கப்பட்டு நடந்து வந்த நிலையில் கடலூர் மாவட்டத்தில் கனமழையால் பள்ளிகள் தொடங்கப்படவில்லை இந்நிலையில் 15 நாட்களுக்குப் பிறகு மழை விட்டு பள்ளிகள் திறக்கப்பட்டது ஒன்றிலிருந்து எட்டாம் வகுப்பு வரை மாணவர்கள் பள்ளிக்கு உற்சாகத்துடன் வந்தனர். கடலூர் புதுபாளையம் பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிக்கு வந்த மாணவமாணவிகளுக்கு கடலூர் சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் இனிப்புகள் மற்றும் பூக்கள் வழங்கி பள்ளி மாணவர்களுக்கு வரவேற்பு அளித்தனர். பின்னர் பள்ளிக்கு வரும் மாணவ மாணவிகளுக்கு பள்ளி நிர்வாகம் சார்பில் செய்யப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யபட்டு உள்ளனவா என தலைமை ஆசிரியரிடம் கேட்டு அறிந்தனர். இதே போல் கடலூரில் அமைந்து உள்ள நகராட்சி பள்ளியில், மாணவர்களுக்கு இசை தாளம் முழங்க பள்ளி மாவண மாணவிகளை ஆசிரியர்கள் வரவேற்றனர்.மாணவர்களை வரவேர்த்த பின்னர் கடலூர் மாவட்ட ஆட்சியர் பாலசுப்புரமணியம் செய்தியாளர்களை சந்தித்தார் அப்பொழுது அவர் கூறுகையில், கடலூர் மாவட்டத்தில் 2,129 பள்ளிகள் உள்ள நிலையில் அனைத்து பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பள்ளிகளில் நடைபெற்று வருகிறது பள்ளி மாணவ மாணவிகள் பாதுகாப்பு கருதி கொண்டு ஒரு வகுப்பறையில் 20 பேருக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன கடலூர் மாவட்டத்தில் பெய்த தொடர் மழையால் பள்ளிகள் 15 நாட்கள் திறக்கப்படாமல் இருந்த அகற்றப்பட்டு கட்டிடத்தையும் உறுதி செய்யப்பட்டு தற்போது பள்ளிகள் திறக்கப்பட்டு இருக்கிறது மாணவர்கள் உற்சாகத்தோடு பள்ளிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் ஒரு சில மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை அவர்களும் இரண்டு மூன்று நாட்களில் வந்துவிடுவார்கள் என மாவட்ட ஆட்சியர் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட

# ஓ.பி.எஸ்-இ.பி.எஸ்..



கடலூரில் மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த முன்னாள் முதல்வர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி, அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ பன்னீர்செல்வம்,தென்மேற்கு பருவமழை காலத்தில் கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதனால் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் அனைத்தும் நிரம்பாவிட்டாலும், நீர்நிலைகளில் ஓரளவு தண்ணீர் இருந்தது.இந்த நிலையில் தமிழகத்தில் கடந்த மாதம் 25 ஆம் தேதி தொடங்கிய வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளது. இதனால் கடலூர் மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக தொடர் கனமழை பெய்தது. மேலும் தற்பொழுது கடந்த இரண்டு நாட்களாக மழை இன்றி காணப்பட்டு வருகிறது.இந்த நிலையில் கடந்த ஒரு வார காலமாக பெய்த தொடர் மழையால் பெரும்பாலன ஆறுகள், ஓடைகள் மற்றும் நீர்வரத்து வாய்க்கால்களில் மழைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதில் பல இடங்களில் விளை நிலங்களுக்குள்ளும் தண்ணீர் புகுந்துள்ளது. இந்த மழைநீர் இன்னும் வடியாததால், பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது.புவனகிரியில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள், முன்னாள் முதல்வர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி, அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் வழங்கினர். டெல்டா மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் இன்று பார்வையிட்டனர். முதல் கட்டமாக புவனகிரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட புவனகிரி நகரில் நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் நிவாரண உதவிகளை வழங்கினார்.ஒரு தனியார் திருமண மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு அரிசி, பாய், போர்வை, வேட்டி, சேலை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினர். அதிமுக எம்எல்ஏக்கள் புவனகிரி அருண்மொழித்தேவன், சிதம்பரம் பாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர். இதை தொடர்ந்து சிதம்பரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள பூவாலை கிராமத்திற்குச் சென்ற முன்னாள் முதல்வர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி, அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் அங்கு மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். சிதம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூவாலை கிராமத்தில் அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ் இணை ஒருங்கிணைப்பாளர், எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் மழை பாதித்த பார்வையிட்டனர். பரவனாற்றின் கரையில் சுமார் 2000 ஏக்கர் விளை நிலங்கள் தண்ணீரில் மூழ்கிய பகுதியை பார்வையிட்டனர். பின்னர் சிறிய சாலையில் இருவரும் கட்சி நிர்வாகிகளுடன் ஜீப்பில் சென்று பயிர் பாதிப்புகளை பார்வையிட்டனர். அவருடன் முன்னாள் அமைச்சர்கள் சிவி சண்முகம், எம்.சி.சம்பத், எம்எல்ஏக்கள் புவனகிரி அருண்மொழித்தேவன், சிதம்பரம் பாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.

## கடலூரில் மழை, வெள்ள பாதிப்பை டிராக்டரில் சென்று

# ஆய்வு செய்த பாஜக தலைவர் அண்ணாமலை.






கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை ஒன்றிய பகுதியில் டிராக்டர் ஓட்டி சென்று மழை தண்ணீர் மூழ்கிய விளைநிலைங்களை பாஜக மாநில தலைவர் அண்ணாமலை பார்வையிட்டார்டிராக்டரில் ஏறிச் சென்று, பயிர் மூழ்கிய இடத்தில் இறங்கி நெற் பயிரை பார்வையிட்டு விவசாயிகளிடம் இது குறித்து கேட்டறிந்தார். தமிழக முதல்வர் ஸ்டாலின் காரில் இருந்தபடியே வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டு செல்கிறார் என்றும் என்எல்சி நிறுவனத்தின் சிஎஸ்ஆர் நிதி மூலம் கீழ் பரவனாறு தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.கடலூர் மாவட்டம் புவனகிரி அருகே உள்ள சாத்தப்பாடி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட பூவாலை, குறிஞ்சிப்பாடி பகுயில் பல்வேறு கிராமங்களில் மழை வெள்ளத்தினால் சேதமடைந்த விளைநிலங்களை நவ13 பாஜக மாநிலத்தலைவர் அண்ணாமலை பார்வையிட்டு, மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்களை வாங்கினார். மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த மழை, வெள்ளத்தால் பரவனாற்றில் அதிக அளவில் தண்ணீர் சென்றதால் பூவாலை கிராமத்தில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் தண்ணீரில் மூழ்கியது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்த கிராமத்தில் பாதிக்கப்பட்ட பயிர்களை பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை பார்வையிட்டார். இந்த கிராமத்திற்கு காரில் வந்த அவர் அங்கிருந்து டிராக்டரில் ஏறி சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரமுள்ள வயல் பகுதிக்கு சென்றார். பின்னர் வயலில் தண்ணீர் மூழ்கிய பகுதிகளில் இறங்கிய அண்ணாமலை, வயலில் மூழ்கிய நெற்பயிர்களை பார்வையிட்டு பாதிப்புகள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார். மேலும் எதனால் பாதிப்பு ஏற்படுகிறது?பாதிப்பு ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்பனபோன்றவற்றையும் விவசாயிகளிடம் கேட்டறிந்தார். பின்னர் மீண்டும் டிராக்டரில் செல்லும் போது சிறிது தூரம் டிராக்டரை அண்ணாமலையே ஓட்டிச் சென்றார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில் பரவனாறு ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் இந்த கிராமத்தில் சுமார் 3000 ஏக்கர் விளை நிலங்களில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழுகி விட்டது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் சிஎஸ்ஆர் நிதி மூலம் ஏற்கனவே மேல் பரவனாறு, நடு பரவனாறு தூர்வாரபட்டது. ஆனால் கீழ் பரவனாறு தூர்வாரப்படவில்லை . என்எல்சி நிறுவனத்திடம் பேசி சிஎஸ்ஆர் நிதி மூலம் கீழ் பரவனாற்றை தூர்வாரி இந்த நதியை அகலப்படுத்துவதற்கான முயற்சிகளை பாஜக மேற்கொள்ளும். இந்த பகுதி விவசாயிகள் அதிக அளவில் பயிர் கடன் வாங்கி இருக்கிறார்கள் . அதை ரத்து செய்ய வேண்டும். கடந்த 2016 ம் ஆண்டிலேயே பயிர் கடன் வாங்கி இருக்கிறார்கள். அந்த கடன்களையும் சேர்த்து ரத்து செய்ய வேண்டும். பொதுவாக வெள்ள பாதிப்புகளை பார்ப்பவர்கள் சாலையோரத்தில் நின்று பார்வையிட்டு சென்று விடுகிறார்கள். ஆனால் நான் விவசாயிகள் பாதிக்கப்பட்ட இடத்தில் நேரடியாக அந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டு உள்ளேன். தமிழக முதல்வர் ஸ்டாலின் காரில் இருந்தபடியே வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டு செல்கிறார். அப்படி பார்வையிட்டால் உண்மை நிலவரம் தெரியாது.அவர் அடுத்த முறை வரும்போது கண்டிப்பாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று விவசாயிகளிடம் கலந்துரையாடி பார்வையிட வேண்டும். அவர் செய்வார் என நம்புகிறேன். விவசாயிகளின் குறைகளை தமிழக அரசு போக்கும் என நம்புகிறேன் எனக் கூறினார்.

# பதக்கத்துடன் திரும்பிய இந்திய அணி

## கடலூர் பெண் வீராங்கனைக்கு உற்சாக வரவேற்பளித்த ஊர் மக்கள்!





கடலூர் மாவட்டம் திட்டக்குடி தாலுகாவில் உள்ளது கண்டமத்தான் என்ற சிறு கிராமம். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த வேலு என்பவரது மகள் மீனாட்சி. நேபாளத்தில் உள்ள காட்மெண்டில் சமீபத்தில் சர்வதேச பெண்கள் கபடி போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்திய பெண்கள் அணியினர் விளையாடி வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளனர். இந்தப் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 5 மாணவிகள் பங்கேற்றுள்ளனர். அதில் கண்டமத்தான் கிராமத்தைச் சேர்ந்த வேலு என்பவரது மகள் மீனாட்சி ஒருவர் ஆவார். இவர் அணியின் கேப்டனாக பொறுப்பேற்று விளையாடி வெற்றிபெற்று சொந்த ஊர் திரும்பியுள்ளார். அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளித்துள்ளனர். மேலும், அவருக்குப் பல்வேறு தரப்பினர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். குறிப்பாக, புவனகிரி அதிமுக எம்.எல்.ஏ. அருள்மொழிதேவன் கபடி வீராங்கனை மீனாட்சிக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். அதோடு கபடி போட்டியில் கலந்துகொள்வதற்குத் தேவையான உதவிகளை செய்து தருவதாக உறுதியளித்துள்ளார். இந்த மாணவியின் திறமையை தமிழ்நாடு அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அந்தக் கிராமத்து மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விளம்பர தொடர்புக்கு

9597887847

8870884969